# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 விடை (17-5-1989) ஓர் உருபா (இதழ் எண்: 121)


# நாம் எதிர்த்துப் போராடுவது இந்திய ஒருமைப்பாட்டையோ ஒற்று-மையையோ அன்று!

இன நிலையில் ஆரியத்தையும், பொருள் நிலையில் முதலாளியத்தையும், மொழி, கலை பண்பாட்டு நிலையில் இந்தி, சமசுக்கிருதத்தையும், ஆட்சி, அதிகார நிலையில் வடநாட்டு வல்லாண்மையையுமே ஆகும்.

## -இவ்வத்தனையும் இணைந்துதான் இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு என்றால், நாம் போராடுவது தனித் தமிழ்நாட்டு விடுதலைக்கே!

-பாவலரேறுவின் வெள்ளை அறிக்கை!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

மடல் : 11

மதுரை, நடுவண் சிறை.
17-12-88

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு, வணக்கங்கள்.

தங்களின் கடுமையான பணி அழுத்தங்களுக்கிடையில் தாங்கள் 13-ஆம் நாள் எழுதிய மடல் நேற்று மாலை கிடைக்கப் பெற்றுப் படித்தோம். அச்சக அளவில் ஏற்பட்டுள்ள கடுமையான பணி அழுத்தங்களைத் தாங்கள் எழுதியது மிகவும் உருக்கமாக இருந்தது. இயல்பாக நான் கவலுறுகிற நிலையில் என்னை வைத்திருக்கிற சூழல் அ'து ஒன்றே.

கடந்த நாற்பதாண்டுக் காலமாக அல்லும் பகலும் அயராது இத் தமிழ்ப் பேரினத்திற்காகத் தம் உடல், பொருள், உயிர் அனைத்தையும் ஈகப் படுத்திக் கொண்டு, தொடர்ந்து உழைத்துக் கொண்டுள்ள அரும்பேராற்றலாகவே தங்களை என்னால் காணமுடிகிறது. தந்தை பெரியார் அவர்களுக்குக் கூட இத்தகைய அளவிலான தொல்லைகள் இல்லை. அப்படி இருந்திருக்குமாயின் அவர் எப்படி இருந்திருப்பார் என்பதில் ஐயமே. தம் முதற் படியிலிருந்தே ஏழ்மையின் வாட்டமும், கொள்கையின் ஊட்டமும் தங்களை இத்தமிழ்ப் பேரினத்திற்கென வாழ்வித்துக் கொண்டிருப்பதை ஏனோ அடிக்கடி எண்ணிப் பேருவகை கொள்ளினும், தங்களுக்கு வாய்த்த அறுவர் பிள்ளைகளும் தங்களின் தொண்டுக்குக் கூட வேண்டா, தனிப்பட்ட நிலையிலாயினும் தங்களுக்கு உதவினரா?—என எண்ணி எனக்குள் விம்முகிறேன். ஏதும் பயனற்று வாழ்ந்து கொண்டுள்ளனரே, உங்களால் உருப் பெற்ற உயிர் உடலங்கள்; யான் என்ன செய்ய? **"இன்றைக்கே எழாமல் நீ, என்றைக்குத்தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்...?"**—எனத் தாங்கள் இத்தமிழினத்திற்குப் பாடினீராயினும், எம் அறிவாசானே, என்னால் அதை நம் குடும்ப உறுப்புகளுக்காகவும் சேர்த்தே, இன்னுஞ் சொன்னால் அவற்றுக்காகவே எழுத வேண்டியதாகத் தோன்றுகிறது. என் செய்ய? எம் அங்காப்புக்கு விரைந்து விடியல் கிடைக்கும் எனும் முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன். நிற்க.

தாங்கள் எழுதியதில், காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை அச்சகத்தில் இருப்பதாகத் தாங்கள் எழுதியிருந்தது, அன்றைய நாளில் நான் கண்டிரா விட்டாலும், திரு. பன்னீர்ச்செல்வம் மாமாவோடும், இல்லையேல் தனித்தும் தாங்கள் தென்மொழிக்கெனக் கடும் உழைப்புச் செலுத்திய அந்நாள் முதல் இற்றை நாள் வரை தொடர்ந்து கொண்டுள்ள அவ்வுழைப்பாற்றலின் தொகு மொத்தத்தை எண்ணிப் பார்க்கிறேன். ஐயகோ, எந்தமிழ்ப் பேரினமே இவ்வமைப்பின் தொகு மொத்தத்தில் ஒரு பேரறிஞன் வெளிநாட்டில் இருப்பானுயின் எத்தகு நிலையில் பணியாற்றியிருப்பான்? அவனுக்கு எவ்வகை நிலையில் வாய்ப்புகள் கிட்டியிருக்கும்? 'ஏ! அடிமைப் பிறவியே! உனக்கென வாய்த்த இப் பேரறிஞனின் உழைப்பைக் கண்டு உன் உணர்வுகள் கூசவில்லையா? உன் உடல் அணுக்கள் சாகவில்லையா?'- என்று என்னால் தமிழின மக்களைக் கேட்க முடிகின்றது—என் உடன் பிறந்தாரைக் கேட்டுப் பயனற்றுப் போய் விட்டதால். நிற்க.

ஈரோட்டுத் தென்மொழி அன்பர்களை அன்புடனும், அக்கறையுடனும் கேட்டுக் கொள்கிறேன். எந்தமிழ்க் குடிப்பிறப்புகளே, "My cry eckoing in the sky" என்ற என் ஆங்கிலப் பாடலில் நான் ஒரு வரியில் எழுதியிருப்பேன். (தென்மொழி, சுவடி 17 ஓ4—இல் வந்தது.) "I beg, if any one gives, for the only thing" என்கிற வரியில்—"யாரேனும் கொடுப்பாராயின், அ'து ஒன்றுக்காக நான் இறப்பேன்" என்று. ஆம்! எந்தாய்த் தமிழினத்தின் நலம் காக்கப் புறப் பட்டுத் தளர்நடையிட்டுக் கொண்டிருக்கிற 'முதல்வரை'யும், அவர்தம் இதழ்களையும் (அடிப்படையாகக் கொண்டு), அவரின் அரும்பெரும் சிந்தனை வெளிப்பாட்டிற்கான திட்டத்திற்கும் ஏற்பாடு செய்யுங்கள் என்பதே. இ'து அதிலிருந்து வேறு பட்டதன்று என்றே எண்ணுகிறேன். நிற்க.

...நாங்கள் சென்னை மாறுதலுக்காகக் கேட்டு எழுதியிருந்ததற்கு நேற்று மாலை மறுப்புத் தெரிவித்து மடல் வந்துள்ளது. "Your letter has carefully considered by the court, and not accepted"—என்று பொருள்பட எழுதியிருந்தனர். இது பற்றிச் சிறை அலுவலரிடம் நேற்று மாலை பேசினேன். அது பற்றி வேறு வழியில் முயலலாம் என்றும், கிடைக்கலாம் என்றும் கூறினார்......

அம்மா, இம் மடலில் தங்களுக்கு இடம் குறைந்து விட்டது—என்று எண்ண வேண்டாம். தங்கள் மீதுள்ள எம் அன்புப் பொழிவை அக்கறையை எழுத இது போதாதுதான். இருப்பினும் சில செய்திகள் எழுதவே நிறைந்து விட்டன. தங்களின் 8, 10-ஆம் பக்கல்களிட்ட ஒரே மடல் கிடைக்கப்பெற்றேம் அதில் அப்பா அவர்கள் உந்து வண்டி ஏறுகையில் விழுந்து விட்ட செய்தி மிகவும் துணுக்குற வைத்தது. என் செய்ய? என் உள்ளமே துடித்து நின்றது. அப்பா சென்று வர ஒரு மிதியிழுவை வண்டியை நிலையாக அமர்த்துவது நலம். அது மிகச் சரியாக இருக்கும். உறுதியாக

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தலைமையமைச்சர் தமிழினத்தைப் பொறுத்த அளவில் மிக மிக விழிப்பாகச் செயல்படுகிறார். எங்கு தமிழீழத்தில் விடுதலைப் போராளிகளின் கை ஓங்கி விடுமோ என்பதில் மிகவும் எச்சரிக்கையாக உள்ளார். தமிழீழத்தில் அமைதியை உண்டாக்க என்று ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் இந்தியப் படைகளைக் கொண்டு, மிகவும் கரவாக, விடுதலைப் புலிகளின் பேரெதிர்ப்பை ஒழித்துக் கட்டுகிற முயற்சியைச் செய்தார். புலிப் படையின் பெரும் பகுதியை மிகவும் கொடுமையாக அழித்தார். அமைதியை ஏற்படுத்த என்றும், ஆட்சியாளர்க்கு உதவுவது என்றும் படைகளை ஓர் அளவில் திரும்பப் பெறுவது என்றும்.—அவர் எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் இலங்கைத் தமிழர்களுக்கு மாறுனதாகவே இருந்து வருகிறது.

இலங்கையின் தலைமை நிலையில் செயவர்த்தனே மாறியதையும் பிரமதேசா வந்ததையும் கூட அவர் நடவடிக்கைகளுக்குச் சார்பாகவே ஆக்கிக் கொண்டார். அண்மையில், இந்திய அரசின் எந்தத் தலையீடும் இன்றி, இலங்கை அதிபர் பிரமதேசாவும் விடுதலைப் புலிகளின் படிநிகராளிகளான அரசியல் கருத்தாளர், இலண்டன் பாலசிங்கமும், அரசியல் பிரிவுத் தலைவர் யோகியும், கிளிநொச்சி பகுதித் தலைவர் மூர்த்தி லலித்தும், லாரன்சும், திருவாட்டி பாலசிங்கமும் இலங்கை ஆட்சி அதிகாரப் பங்கீடு தொடர்பாகப் பேச்சுரையாடல் நடத்தியதில் கூட, இராசீவ், தமிழீழக் கோரிக்கைக்குச் சிங்கள அரசு எவ்வகையானும் இசைந்துவிடக்கூடாது என்பதில் பிரமதேசாவிற்கு பல வகையான எச்சரிக்கைகளைக் கொடுத்துள்ளார். ஏது எவ்வாறாயினும், தமிழர்களுக்கென்று தமிழீழம் என்றொரு தனிநாடு அமைந்து விடாமல் இருக்க, இராசீவ் முன் கூட்டியே எத்துணை விழிப்பாகச் செயல்பட வேண்டுமோ அத்துணை விழிப்பாகச் செயல் பட்டு வருகிறார்.

இது போலவே கடந்த பிப்ரவரி தேர்தலில், தமிழ்நாட்டில்,வேறு கட்சி ஆளுமைக்குவந்துவிடக் கூடாது என்பதில் இராசீவ் காட்டிய அக்கறையும், ஆர்வமும்,சொல்லுந்தரமன்று.பின்னர், அவர் எதிர் பார்த்ததற்கு நேர்மாறாகவும் வேறாகவும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைக் கைப்பற்றியவுடன், அந்நிலைக்கு மூப்பனாரே முழுக் காரணம் என்று காரணம் காட்டி, ஒருவாறு தமக்கு நேர்ந்த இழிநிலையையும் பழிநிலையையும் சரிகட்டிக் கொண்டதுடன், அடுத்து நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலிலும் அந்நிலை நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக, முன்னர், வேண்டாம் என்று ஒதுக்கிய செயல்லிதா அ.தி.மு.க., அணியைத் தம் கட்சியுடன் இணக்கப் படுத்திக் கொண்டார்.

அத்துடன் நில்லாது, தமிழ் நாட்டிலும், மற்ற சில மாநிலங்களிலும், ஆட்சிக்கு வந்துவிட்ட எதிர்க் கட்சிகளின் வலிவையும் அதிகார நிலையையும் குறைக்கும் நோக்கத்துடனும், தம் ஆட்சி அதிகாரங்களை விரிவு படுத்தும் எண்ணத்துடனும், கருநாடக அரசைக் கவிழ்த்ததுமன்றி, சிற்றூர்ப்புற ஐந்தாய (பஞ்சாயத்து) ஆட்சியை விரிவு படுத்தவும் அவற்றுடன் நேரடித் தொடர்பு கொள்ளவும் இக்கால் ஆழமாகக் கருதி முடிவு செய்து செயல்பட்டு வருகிறார்; அதற்கென ஆட்சியியல் சட்டத்திலும் திருத்தம் கொண்டு வர விருக்கிறார்.

இந்தியாவைப் பொறுத்தவரை, நடுவண் ஆட்சி எப்பொழுதும் இந்தியத் தேசிய இனங்களுக்கு மாறுன ஆட்சியே! அதுவும் தமிழ்த் தேசிய இனத்திற்கு, வேறு எந்தத் தேசிய இனத்தை விட முற்றிலும் வேறுன ஆட்சியே! இத்தனை மாறுபாடுகளையும் வேறுபாடுகளையும், தம் வல்லதிகாரத்தாலும், சூழ்ச்சிகளாலும் அடக்குமுறைச் சட்டங்களாலும், அடியோடு துடைத்து, அழித்து விட்டுத் தில்லியை ஆளும் முதலாளியமும் பார்ப்பனியமும் இணைந்து, என்றென்றும் தாங்களே தங்கள் பிறங்கடைகளே ஆண்டு வரலாம் என்று நன்கு திட்டமிட்டு, அதன்படி செயல்பட்டு வருகின்றன. இத் தில்லுமுல்லுகளுக்கும் திருட்டு, சூழ்ச்சி, ஏமாற்றுத் தனங்களுக்கும் ஒட்டு மொத்தமாகத் தரப்படும் பெயர்களே இந்திய ஒற்றுமை, ஒருமைப் பாடு, தேசிய நீரோட்டம் என்பவெல்லாம். இவை என்னவோ உலகக் கண்ணோட்டம், மக்கள் நலம் கருதிச் சொல்லப் படுவனவாகச் செயல் படுவது இன்னொரு வகை ஏமாற்றே!

இந்நிலையில் நாமும் அதே உணர்வுடன் நம் நோக்கத்தை மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டியுள்ளது. நாம் எதிர்த்துப் போராடுவது இந்திய ஒருமைப் பாட்டையோ ஒற்றுமையையோ அன்று. இன நிலையில் ஆரியத்தையும், பொருள் நிலையில் முதலாளியத்தையும், மொழி, கலை, பண்பாட்டு நிலையில் இந்தி, சமசுக்கிருதத்தையும், ஆட்சி, அதிகார நிலையில் வடநாட்டு வல்லதிகாரத்தையுமே ஆகும். இவ்வத்தனையும் இணைந்ததுதான் இந்திய ஒருமைப்பாடு என்றால், நாம் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையையே முன் வைக்க வேண்டும் அதற்காகவே போராடவும் வேண்டும். 0

## மெல்ல மெல்ல ஏற்றப்படும் நச்சு மருந்து இந்தி!

உயிரைப் பறிக்கும் நச்சு ஊசியை மெல்ல மெல்ல ஏற்றுவதைப் போல, நடுவண் அரசு இந்தியை மெல்ல மெல்லத் திணிக்கின்றது.

—அப்துல் லத்தீப்.

சட்டமன்ற உறுப்பினர். மே 5-இல், பொருள் ஒதுக்கீடு உரை வரைவு மீது, கருத்துரை.

Scanned with CamScanner

# கல்வி உலகம்!

புதிய கல்விக் கொள்கை வல்லரசிய வடிவம் கொண்டது. ஆட்சியாளர்கள் தொடர்ந்து எளியவர்களை ஏமாற்றி மீண்டும் அதிகாரத்தைத் தொடர்வதற்கு வகை செய்யும் தன்மையில் அவர்களது நலனுக்கு மட்டுமே பயன்படக் கூடிய வகையில் புதிய கல்விக் கொள்கை அமைந்துள்ளது.

''நவோதய'' பள்ளிகளைத் தொடக்குவது நாட்டில் உள்ள மேல் தட்டுப் பிரிவினர்க்கே பயனளிக்கும். கியூபாவில் காசுட்ரோ பொறுப்பேற்ற பிறகு ஓராண்டுக் காலத்திற்குள்ளே 100 விழுக்காடு மக்களுக்கும் கல்வியறிவு வழங்குவதில் வெற்றி கண்டுள்ளார்.''

கல்வியை முழு அளவில் தொழில் கல்வியாக அளிப்பது என்பது தவறான போக்கு.

கல்லூரிகளுக்குத் 'தன்னாட்சி' அளிக்கும் போக்கைத் தொடருவதன் மூலம் பல்கலைக் கழகங்கள் வெறும் ஆளுமை அமைப்புகளாக மட்டுமே ஆகிவிடும் தீம்பு உள்ளது.-வி. ஆர். கிருட்டிணன்.
முன்னாள் உச்ச மன்ற நடுவர்.

அனைத்திந்திய அளவிலான கல்விக் கொள்கை வகுப்பது என்பதே தவறானது. மாநிலத்திற்கு மாநிலம் கல்வித்தரத்தின் கல்விக் கொள்கையின் தேவை மாறுபடும்.

கல்வியாளர்கள், ஆசிரியர்கள் போன்று கல்வித் துறைத் தொடர்புடையவர்களைக்கொண்டே கல்வித் திட்டங்கள் வகுக்கப் படல் வேண்டும். இதில் அரசியல்காரர்கள், அதிகாரிகள் தலையீடு கூடாது. — வேணுகோபால்.
உயர்நீதிமன்ற முன்னாள் நடுவர்.

அளவுக்கதிகமான தொழிற்கல்விக்குச் சிறப்பிடம் தருவது கடுமையான பண்பாட்டுச் சீரழிவைத் தரும். — சின்னப்ப(ரெட்டி).
நடுவர் உச்சநெறி மன்றம்.

—சென்னை அனைத்திந்தியக் கல்விப் பாதுகாப்பு மாநாட்டின் உரைகள்-தினமணி —15 2-89

தொகுப்பு: பறம்பை அறிவன்.

(2-ஆம் பக்கம் தொடர்ச்சி)

அதைச் செய்து கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். அப்பா உந்தில் போய் வருவது எனக்கு மிகக் கவலையாக உள்ளது. நிற்க. அம்மா, எங்களுக்கு எந்தச் சிறு தொல்லையும் இல்லை. நாங்கள் மகிழ்வாக உள்ளோம். எங்களைப் பற்றித் தாங்கள் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பதாக அப்பா எழுதியிருந்தார்கள். ஏன் கவலுற வேண்டும்? அமைந்து எண்ணுங்கள். எனக்கோ, யாருக்குமோ எவ்வகைச் சிறு தொல்லையும் இல்லை. மிகச் சிறந்த உணவு, காற்றோட்டமான அறை, நிறைய நீர்— குடிக்க—குளிக்க. புறக்க நல் அலுவலர்கள்... நிறைய பொருள்கள், பண்டங்கள் தின்கின்றோம். எனவே ஓர் இம்மியும் கவலையில்லை. அப்படி உங்களுக்குக் கவலை இருக்குமே என்றே கிழமைக்கு ஒரு முறை தொடர்ந்து மடல் எழுதிக் கொண்டே உள்ளேன். இனி, என்னைக் காண வேண்டும் எனும் எண்ணம் ஏற்படுங்கால்தான், அப்பா அவர்கள் தம் தொல்லையையும் மீறித் தங்களை அனுப்பி வைக்கிறார். ஏன் தாங்கள் கவலுற வேண்டும்?

எங்களுக்குச் சிறை என்கிற உணர்வே போய் விட்டது. இக் கால் ஒரு சிற்றூரில் இருப்பது போன்று உள்ளது. நீங்கள் வருத்தப்படுவதாக எழுதுவது ஒன்றுதான் எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது......

அனைவரும் மகிழ்வாக இருக்க வேண்டும் என்பதே என் அன்பு வேண்டுகோள். அம்மா மகிழ்வாக இருங்கள்! அன்பு மகன், பொழில்.

# பிள்ளைப்பேற்றுக்கு அலைகிறார்களா?

- அதியமான் -

அக்காலத்தில் அரசர்கள் ஆண்டபோது ஊர்வலம் செல்வார்கள். எதற்காக? மக்களுக்கு இருக்கும் குறைகளைக் கண்டு அதனை நீக்க, மாற்று உரு ஒப்பனையில் அரசர்கள் இரவில் சென்று மக்களுக்கு ஏதாவது இடையூறுகள் நடக்கின்றனவா எனக் கண்டு அவற்றை நீக்குவார்கள்.

இப்போது இந்தியா குடியரசு நாடு. தலைமையமைச்சர் இராசீவும், அவர் மனைவி சோனியாவும், குடியரசுத் தலைவரும் அவர் மனைவி சானகியும், நாட்டை சுற்றிப் பார்க்கும் பெயரில் அடிக்கடி சுற்றுச் செலவு செய்து வருகிறார்கள். பல கோடி உருபாக்கள் செலவு ஆகிறது. மக்கள் குறைகளைக் கேட்டதாகவோ, குறைகளை நீக்கியதாகவோ தெரியவில்லை. இருவரும் மனைவியரை ஒன்றாக அழைத்துக் கொண்டு மகிழ் உலாவந்து, காஞ்சி, காமக்கோடி சரசுவதியையும், மேல் மருவத்தூர் பூசாரியையும் பார்த்துக் கோவில் கோவிலென்று அலைகிறார்கள். இந்த நாட்டில் கல்லா மாக்கள் மூட நம்பிக்கையில் பிள்ளைப்பேற்றுக்கு அலைவதுபோல இவர்களும் பிள்ளைப் பேற்றுக்கு அலைகிறார்களா?

இதற்கா நம்முடைய பணம் பாழாக வேண்டும்! எண்ணிப் பாருங்கள், பார்ப்பனியர் ஆட்சியில் பார்ப்பனியத்தை வளர்க்கும் வகைகளை! நாட்டில் வறட்சி, பஞ்சம் வேலையில்லாத் திண்டாட்டம், இரவலர்களின் கூட்டம் நாளுக்கு நாள் பெருகி வளர்கின்றன. இவற்றையெல்லாம் போக்க வழி இல்லை. கோவில் கோவில்களாய் அலைகிறார்கள். இதை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வேறு சுற்றிச் சுற்றிக் காட்டுகிறார்கள். வெட்கம்!

Scanned with CamScanner

(தொடர். 4) (முன் இதழ்த் தொடர்ச்சி)

# குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை..!

## தமிழ்நாடு விடுதலைப் படைகளும் இந்தி(ய)ப் பாசிசக் கும்பல்களும்

- செ. அமிழ்தன் -

### இந்தி(ய) பாசிசக் கும்பல்களும், உளவுப் படை வன்முறைக் கொள்கையும்:

குடமுருட்டிப் பால வெடிப்பையடுத்துத் தொடர்ச்சியான பல வெடிகுண்டு நிகழ்வுகள் தமிழகத்தில் திருவல்லிக்கேணி, பெரம்பூர், மெரீனு, திருச்சி முத்தரச நல்லூர், மதுரை அஞ்சல் நிலையம் போன்ற இடங்களில் நிகழ்ந்தன. இவற்றுடன் பல திட்டமிட்ட வன்முறைக் கலவரங்களும் நடந்தேறின. இவை அனைத்தும் தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் புரட்சி அமைப்புகளை ஒடுக்குவதற்கும், பொது மக்களை அச்சவுணர்விலேயே முடக்கி வாழ வைப்பதற்கும் வழியமைக்க இந்தி(ய) உளவுப் படைகள் நிகழ்த்திய நிகழ்வுகளே ஆகும். இந்த நிகழ்வுகளைத் தமிழக மற்றும் தில்லி ஆளும் கும்பல்களே இணைந்து உருவாக்கி நிறைவேற்றினுர்கள். ஏனெனில் குடமுருட்டி குண்டு வெடிப்பு நிகழ்வு பாசிசக் கும்பல்களின் முதுகில் ஒரு சவுக்கடியாக (a whip lash) விழுந்ததே ஆகும். அது கோரிக்கைகளையே கொடுத்து வந்த முறைகளுக்கிடையே குண்டுவெடிப்பாக அமைந்ததே ஆகும். இச் சவுக்கடியால் காய்ந்து பிரிந்த பட்டைத் தோலின் உரிப்பே தொடர்ச்சியான அஞ்சத்தக்க நிகழ்வுகளும், வன்முறைக் கலவரங்களும் ஆகும்.

### தமிழீழ விடுதலைப் போராட்டமும் இந்தி(ய) பாசிசக் கும்பல்களும்:

இவ்வகையில் ஓர் உளவுப்படை அச்ச நிகழ்வைத் (Terrorism of Intelligence Agencies) தூண்டி விட்ட பாசிசக் கும்பல் இந்நிகழ்வுகளுக்குப் பின்னணியாகத் தமிழீழ விடுதலைப் போராளிகளின் அமைப்புகள் இருந்து வருவதாகப் பொய்ப்பரப்பலையும் கட்டவிழ்த்து விட்டது. இதற்குச் சில கரணியங்கள் இல்லாமல் இல்லை. அதற்கான கரணியம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் எவ்வகையிலும் தமிழக மக்களைக் கிளர்ந்தெழச் செய்து விடக் கூடாது, அதற்காக ஈழப் போராளிகளைப் பற்றி இழிவான கருத்துகளே தமிழக மக்களிடையே நிலவ வேண்டும், அதைக் கொண்டு ஈழப் போராளிகளின் மீது இந்தி(ய) அரசு ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டும் என்பதே ஆகும். இதனுல் போராளிகள் பலரும், புரட்சி அமைப்புகளைச் சார்ந்தவர்கள் பலரும், தமிழகத்தில் ஆட்சியில் இல்லாத தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும் தளைப்(கைது) படுத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வாறு தில்லிக் கும்பலின் கையாள்கள் வெறியாட்டம் போட வாய்ப்பாக இருந்தது அன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டமே ஆகும்.

ஏனெனில் அந்தக் காலம் இலங்கையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்ச நிலையை எட்டியிருந்த காலம். அதுவே தமிழகத்தில் தில்லியின் கொலைவெறி விளையாட வாய்ப்பாக அமைந்தது. அக்காலம் ஈழப் போராளிகள் இலங்கையரசின் முப்படைத் தாக்குதல்களையும் முறியடித்து வந்த காலம். எனவே இலங்கையரசு தன் படைகளை முரட்டுத்தனமாக ஏவிவிட்டுத் தமிழினப் படுகொலையைக் கட்டவிழ்த்து விட்ட காலம். அத்துடன் அல்லாது இலங்கையரசுக்கு ஆதரவாக இசுரேல், பிரிட்டன், பாக்கித்தான் போன்ற நாடுகளின் கூலிப் படைகளும் ஈழத்தில் மறைமுகமாகத் தாக்குதல்களைத் தொடங்கிச் செயல்படத் தொடங்கிய காலம். அதனுல் தமிழக முதலாளிய அரசியல் தரகர்கள் தில்லியரசை நோக்கி "இந்தியா தன் படைகளை அனுப்பி ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டும்; இந்திய அரசே! ஈழத்திற்கு உடனே படைகளை அனுப்பு!" எனத் தான்தோன்றித் தனமான வேண்டுகோள்களை விடுத்த காலம். ஆனுல் அதையெதிர்த்து "இந்தியா படைகளை அனுப்பத் தேவை இல்லை; படைக்கருவிகளை வழங்கி உதவட்டும்" என விடுதலைப் போராளிகள் மறுத்து வலியுறுத்தி வந்த காலம். இவற்றையல்லாது 'தமிழக விடுதலை' எனவும் 'தனித்தமிழ்நாடு' எனவும் தமிழகத்தில் முழக்கங்கள் விரிவாக எழத் தொடங்கிய காலம்.

இந்த வாய்ப்பை இந்தி(ய) அரசு சரியாகவே பயன்படுத்திக் கொண்டது. அதனுல்தான் குடமுருட்டி நிகழ்வால் அச்சமடைந்திருந்த தில்லிக் கும்பல் திட்டமிட்ட தனது உளவுப் படை அச்ச நிகழ்வை (பயங்கர வாதத்தை) இக்காலத்தில் கட்டவிழ்த்து விட்டது. அந்நிகழ்வுகளே திருவல்லிக்கேணி, பெரம்பூர், மெரீனு, முத்தரச நல்லூர், மதுரை மற்றும் பல இடங்களில் வெடிகுண்டு நிகழ்வுகளாக நடந்தேறின.

Scanned with CamScanner

**பாசிசக் கும்பல்களும் உளவு அச்ச நிகழ்வின் (பயங்கரவாதத்தின்) உள்ளடக்கமும்:**

தமிழீழ விடுதலைப் போராட்டம் நல்கிய வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட கொலை வெறிக் கும்பல் இவற்றைச் செய்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. அது திட்டமிட்டிருந்த படியே, ''நடைபெறும் குண்டு வெடிப்புகளுக்கு ஈழப்போராளிகளே காரணம்; அவர்கள் தமிழகத் தீவிரக்காரர்களுடன் இணைந்து கொண்டு குழுக எதிர்ப்புச் செயல்களில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். எனவே தமிழக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்'' என ஈழ விடுதலைப் போராளிகளுக்குத் தமிழகத்தில் இருந்த ஆதரவைக் குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. அத்துடன் நில்லாது ''இலங்கையரசின் கண்மூடித்தனமான தாக்குதல்களால் ஈழப் போராளிகள் நிலை குலைந்து விட்டனர். எனவேதான் இது போன்ற செயல்களைத் தமிழகத்தில் நடத்திக் கொண்டு வருகின்றனர். இப்போக்கை அவர்கள் உடனடியாக நிறுத்திக் கொள்ளல் வேண்டும்'' எனப் போராளிகளின் மீது அவதூறுச் சேற்றை பொய்ப்பரப்பல் களின் மூலம் அள்ளி வீசியது. இவ்வாறு ஒரு பக்கத்தில் உளவு அச்ச நிகழ்வுகளையும் பொய்ப் பரப்பலையும் கட்டவிழ்த்து விட்ட இந்தி(ய) பாசிசக் கும்பல், மறு பக்கத்தில், ''இலங்கையரசுக்குப் படைத் தாக்குதல்களை உடனே நிறுத்த வேண்டும்; இல்லையெனில் இந்தியா தனது சிக்கல் தீர்க்கும் (பஞ்சாயத்து) வேலையைக் கைவிட்டு விடும்'' என எச்சரிக்கை விடுத்தது. தனது பொய்ப் பரப்பல்களுக்குச் சப்பைக் கட்டுகளாகச் சென்னை சூளைமேடு, தஞ்சை உரத்த நாடு, வேதாரணியம், இராமேசுவரம் போன்ற இடங்களில் திட்டமிட்ட வன்முறைக் கலவரங்களையும் கட்டவிழ்த்து விட்டது.

இவற்றின் மூலம் தமிழீழ விடுதலைப் போராளிகளை முழுவதுமாகத் தனது கட்டுப் பாட்டுக்குள் தில்லியரசு கொண்டு வந்தது. இவையனைத்து நிகழ்வுகளின் உள்ளடக்கம் பின்வருவதுதான்: ''தமிழகத்தில் வாழும் பொது மக்களை அச்சவுணர்விலேயே முடக்கி வாழ வைக்க வேண்டும். அவர்களிடையே எழும் புரட்சி உணர்வுகளை மழுங்கடிக்க வேண்டும். தமிழகத்தில் வளர்ந்து வரும் புரட்சி அமைப்புகளையும், 'தமிழக விடுதலை' கோரி எழும் ஆற்றல்களையும் அடக்கி ஒடுக்க வேண்டும். இதற்கு முன் நடவடிக்கையாக ஈழ விடுதலைப் போராளிகளைத் தமிழகத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும். அதற்காக எப்படியாவது தமிழீழச் சிக்கலுக்கு ஒரு சமநிலைத் தீர்வு தனைக் காண வேண்டும். அத்தீர்விற்கு ஈழப் போராளிகளைப் பணியச் செய்ய வேண்டும். அத் தீர்வை இலங்கை அரசும் ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும்'' என்பதுவே அது.

**தில்லியின் சூழ்ச்சி வேலைகளும், தமிழ்நாடு விடுதலைப் படையின் எதிர்ப்பும்:**

இத்தகைய கரவான உள்ளடக்கத்தின் விளைவாகவே தமிழகத்தில் ஈழப் போராளிகளிடம் கருவிகள் பறித்தெடுக்கப் பட்டன. அவர்களின் அலுவலகங்கள் அரசினால் மூடி முத்திரையிடப் பட்டன. அவற்றின் மூலம் விடுதலைப் போராளிகள் இந்தியா தரும் தீர்வை ஏற்க கட்டாயப் படுத்தப் பட்டனர். இலங்கையரசைப் பேச்சுரைகள் நடத்த வரக் கோரி தில்லியிலிருந்து தூதுவர்கள் பறந்தனர். பெங்களூரில் சார்க் (SARRC) மாநாட்டின் போது பேச்சுரை நடத்துவதென முடிவு செய்யப் பட்டது. பேச்சுரைக்கான தீர்வும் அணியமானது. இப்பேச்சுரையில் இந்தி(ய) அரசு ஒரு தீர்மானமான முடிவை எடுத்தது. அஃது என்னவெனில், ''இந்தியா தரும் தீர்வைத் தமிழீழச் சிக்கலில் தொடர்புள்ள இரு தரப்பினுள்ளோரும் ஏற்றுக் கொள்ளாத நிலையில் இந்தியப் படைகளை ஈழத்திற்கு அனுப்புதல்'' எனும் முடிவே ஆகும். ஆனால் பேச்சுரை தோல்வியில் முடிந்தது. எனவே இந்தி(ய)த் தில்லி தனது கொலை வெறிப் படைகளைத் தமிழீழம் அனுப்ப முடிவெடுத்தது.

இந்தி(ய) அரசு இத்தகைய முடிவை எடுத்திருந்த நிலையில்தான் பாசிசக் கும்பல்களுக்கு விடை சொல்லும் வகையில், ''இந்திய அரசே, தனித் தமிழீழத்தை ஏற்றுக் கொள்! (அங்கீகரி!) இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பாதே!'' எனும் முழக்கங்களுடன் அரியலூரில் உள்ள மருதையாற்றுத் தொடர் வண்டிப் பாலத்தில் மீண்டும் ஒரு குண்டு வெடிப்பைத் ''தமிழ்நாடு விடுதலைப் படையினர்'' நிகழ்த்தினர். ஆனால் அந்நிகழ்வு 32 மக்கள் உயிர்களைப் பலி வாங்கிக் கொண்டது. இந் நிகழ்வு 1987-ஆம் ஆண்டின் மார்ச்சு திங்களில் நடை பெற்றது.

**தில்லியரசின் இலங்கை மிரட்டலும், இந்தி(ய)-இலங்கை உடன்பாடும்:**

இந்த நிகழ்வால் பெருந் தாக்குண்ட இந்தி(ய) அரசு தன் படைகளை அனுப்பும் திட்டத்தைத் தள்ளிப் போட்டது. அத்துடன் ஈழ விடுதலைப் போராளிகள் இந்தி(ய)த் தில்லி தந்த தீர்வை ஏற்க மறுத்ததால், அவர்களைத் தவிர்த்து இலங்கைச் சிங்கள இன வெறியரசுடன் ஓர் உடன் பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடிவெடுத்தது. அதற்காக இந்தி(ய)அரசு, இலங்கை அரசை மிரட்டும் பணிகளில் ஈடுபட்டது. அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றே யாழ்ப்பாணத்தில்

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# ஈழத்தில் நடந்த தேர்தல் நாடகங்கள்!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் மாநிலச் சட்ட மன்றத் தேர்தல் (Provincial Council Election), மக்களாட்சித் தலைவர் தேர்தல் (Presidential Election), பாராளுமன்றத் தேர்தல் (Parliamentary Election) ஆகிய தேர்தல்கள் நடைபெற்று விட்டன. அவற்றில் தமிழ் மக்கள் பெருமளவில் ஒப்போலையளித்(வாக்களித்)துள்ளார்கள். இதனாலே இலங்கைத் தமிழ்மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை; தமிழீழ விடுதலையை விரும்பவில்லை என்று தெரிகிறது'' என்ற **பொய்ச் செய்தியை** வடஇந்திய அரசு நடத்தும் வானொளியும், வானொலியும் (Television, Radio) பறைசாற்றுகின்றன. இதையொட்டிச் செய்தித் தாளிகைகள் பலவும் கூட இப்பொய்ச் செய்தியை மக்களிடையே பரப்புகின்றன.

உண்மையிலேயே பெரும்பாலான தமிழ் மக்கள் இத்தேர்தல்களில் ஒப்போலை அளித்தார்களா? அல்லது, கள்ள ஒப்போலைகள் (கள்ள 'ஓட்டு') பெருமளவில் ஒப்போலைப் பெட்டிகளில் (ballot box) நிரப்பப் பட்டனவா? இலங்கைத் தீவு முழுவதிலேயுமே (தமிழ்ப் பகுதிகளில் மட்டுமல்லாமல், சிங்களவப் பகுதிகளிலும் கூட) கள்ள ஒப்போலைகள் பெருமளவில் போடப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இங்கிலாந்து நாட்டின் செய்தியாளர் ஒருவர் (Newspaper Reporter) பாராளுமன்றத் தேர்தலின் போது தாம் நேரில் கண்ட நிகழ்ச்சியொன்றை இங்கிலாந்து நாட்டிலிருந்து வெளிவரும் ''அப்சர்வர்'' (OBSERVER) என்ற நாளிதழில் வெளியிட்டுள்ளார்.

''மக்கள் ஒப்போலை அளிக்க வேண்டிய தேர்தல் அலுவலகம் (voting station) வெறிச்சிட்டிருந்தது. திடீரென எட்டு சீருந்துகளும் (cars), முடுந்துகளும் (vans) அங்கு வந்தன. அவற்றிலிருந்து அறுபது பேர் இறங்கி வந்து, தேர்தல் அலுவலகத்துள் சென்று ஒப்போலை அளித்து விட்டு வெளி வந்தனர். இவ்வறுபது பேரும் சீருந்துகளிலும், முடுந்துகளிலும் ஏறி வீடு திரும்பவில்லை. மாறுக தம்முடைய உடைகளை மாற்றிக் கொண்டு, மீண்டும் தேர்தல் அலுவலகத்துள் சென்று இரண்டாம் முறையாக ஒப்போலை அளித்தனர். இரண்டாம் முறை வெளிவந்தபின் மீண்டும் தம்முடைய உடைகளை மாற்றிக் கொண்டு, மூன்றும் முறையாக வும் ஒப்போலை அளித்தனர். இது திரும்பத் திரும்ப நடந்தது. இவ்வாறுக ஒவ்வொருவரும் மொத்தம் பத்து முறை ஒப்போலையிட்டனர். அஃதாவது, அறுபதே பேரால் அறுநூறு ஒப்போலைகள் (votes) இடப்பட்டன''.

மேற்கண்ட செய்தி, இலங்கைத் தீவில் நடந்த தேர்தல்கள் எவ்வளவு நேர்மையற்றவை என்பதைக் காட்டுகிறது. அறுநூறு ஒப்போலைகளிடப் பட்டன (அஃதாவது, அறுநூறு பேர் ஒப்போலையளித்தனர்) என்று அரசு கூறுமேயாகுல், அங்கு உண்மையில் அறுபது பேர்கள்தாம் ஒப்போலையிட்டுள்ளனர். வடஇந்திய அரசு ''தமிழ்மக்கள் பெருமளவில் ஒப்போலையிட்டனர்'' என்று பறைசாற்றுகிறதே, உண்மையில் எத்தனைப்பேர் ஒப்போலையளித்தனர்? திரிகோணமலையில் ஆறுயிரம் பேர் ஒப்போலை அளித்தனர் என்று அரசு கூறுமேயாகுல், உண்மையிலே அறுநூறுபேர் கூட ஒப்போலை அளித்தார்களோ என்னவோ?

தமிழ் நாட்டு மக்கள் வடஇந்திய அரசு விடுக்கும் பொய்ச் செய்திகளுக்கு மயங்கி விடலாகாது!

---

(6-ஆம் பக்கம் தொடர்ச்சி)

இந்தியப் படை வானூர்திகள் உணவுப் பொட்டலங்களை வீசி விட்டுத் திரும்பியமையாகும். இந்த உணவு வீசலில் குறிப்பிடத் தக்கது என்னவெனில், இந்தியா உருசியா (Russia) விடமிருந்து வாங்கிய மிராஃச் (Miraj) வகைப் படை வானூர்திகள் பயன்படுத்தப் பட்டதே ஆகும். ஏனெனில் உருசியாவிடமிருந்து இந்தியா பெற்ற போது, ''இந்தியாவிற்கு அண்டை நாடுகளினுல் ஏதம் (அபாயம்) ஏற்பட்டால் மட்டுமே இந்த வானூர்திகளைப் பயன்படுத்துவோம்'' என ஒப்புதலை அளித்தே பெற்றது. இவ்வாறு **இந்தி(ய) அரசு மிராஃச் வகைப் படை வானூர்திகளைப் பயன்படுத்தி மிரட்டிய பின்னே இலங்கை சிங்கள அரசு இந்தி(ய)த் தில்லியரசுடன் ஓர் உடன்பாட்டைச் செய்து கொள்ள முன் வந்தது.** (இங்கு முன்பு படகுகளின் மூலம் உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணம் கொண்டு சென்ற போது இலங்கையரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நாம் கூறவே வேண்டும்) இதற்குப் பின்னரே கடந்த 1987 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 29-ஆம் நாளன்று இந்திய-இலங்கை உடன்பாடு கொழும்பில் இரு அரசுகளாலும் ஏற்றுக் கையெழுத்திடப் பட்டது. அவ்வுடன்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று போராளிகளினுடைய அமைப்புத் தலைவர்கள் கட்டாயப் படுத்தப்பட்டுத் தில்லியில் சிறை வைக்கப் பட்டனர். எனவே அவர்கள் உடன்பாட்டை ஏற்றுக் கொள்வதென முடிவு செய்து ஆகசுட்டுத் திங்களில் தங்கள் கருவிகளை இந்திய அமைதிப் படையினரிடம் ஒப்படைக்கத் தொடங்கினர்.

(தொடரும்)

# நடுவணரசின் தவறான பொருளியல், ஆட்சியியல் கொள்கைகள்!

## முன்னாள் பொருளியல் நடுவண் அமைச்சர் சி. சுப்பிரமணியம்.

**பொருளியல் பாழடிப்பும் ஏழைகளுக்குப் பயன்படாமையும்:**

குமுகாயத்தின் சாய்கால் மிக்க, வசதி படைத்த சிறு பிரிவினர்க்காக நாட்டின் உண்மையான பொருளியல் அடிப்படைகளில் பெரும்பகுதி பாழடிக்கப்படுகிறது. பண வீக்கத்தின் காரணமாகப் பணத்தின் மாயையில் சிக்கி, மிகப் பெரும்பாலான மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் கடமையிலிருந்து நடுவண், மாநில அரசுகள் தவறிக் கொண்டு வருகின்றன;

மக்கள் தாங்களாகவே உழைத்து வருவாய் ஈட்டுவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். அரசே இலவயமாக அரிசி, கல்வி என்று கொடுத்துக் கொண்டிருந்தால், அரசின் உதவியையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற மனப்பான்மை மக்களுக்கு வளர்ந்து, உழைக்க வேண்டும் என்ற ஆர்வம் மங்கிவிடும்.

நமது பொருளியல் வளர்ச்சியில் வேளாண்மைத் துறையின் பங்கு 60.5 விழுக்காடாக இருந்தது. இப்பொழுது 33 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது. தொழில்துறையின் பங்கு 24.4 விழுக்காடாக இருந்து 27 விழுக்காடாக வளர்ந்துள்ளது. ஆனால் பொருளியல் வளர்ச்சியில், அலுவலர்களின் ஆட்சிச் செலவு 15 விழுக்காடாக இருந்தது. 39.9 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. இப்படி அரசுப் பணிகள், அலுவலர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போவதால் உண்மையான பொருளியல் வளர்ச்சி ஏற்பட முடியாது.

பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வீட்டு வசதிகளைக் குறைவின்றித் தருவதற்கு ஏற்ற திட்டங்களைத் தீட்டுவதற்காக பொருளியல் அடிப்படைகளை ஒதுக்கீடு செய்வதில் முறைவைப்புகளை மாற்றியமைக்க வேண்டும். அடுத்து, பெண்கல்வி பெருகினால்தான் குடும்ப நலத் திட்டம் நாம் எதிர்பார்க்கும் பலன் கொடுக்கும்,

**ஐந்தாயங்கள் (பஞ்சாயத்துகள்) தொடர்பாக நடுவணரசின் தவறான நடைமுறை:**

ஐந்தாயங்க(பஞ்சாயத்துக)ளுடன் நடுவண் அரசே நேரடியாகத் தொடர்பு கொள்ளும் ஏற்பாடு தவறான நடைமுறையாகும். அதிகாரப் பரவல் என்பது இடையில் உள்ள மாநில அரசைப் புறக்கணிப்பதாகவோ, அல்லது தற்காலிக அரசியல் ஆதாயத்திற்காகவோ, அரசியல் நோக்கில் நடைபெறும் செயலாக இருக்கக் கூடாது.

நடுவண், மாநில அரசுகள் இரக்க அடிப்படையில் பொருள் உதவி செய்வதாலேயே மக்களது பொருளியல் நிலை உயர்ந்து விடாது.

ஆடம்பரக்காரர்கள், அவர்களுக்கான வசதி வாய்ப்புகள் செய்தி கொடுப்பது ('வாயுதூத்' — போக்கு வரத்துப் பணிகள்) போன்றவற்றில் அரசு அதிக கவனம் செலுத்துவது கண்டிக்கத்தக்கது. சிற்றூர்ப்புற வளர்ச்சிக்காக அரசு செலவிடும் பணம் தொடர்புடையவர்களுக்குப் போய்ச் சேர்வதே இல்லை.

— சென்னையில், ஏப். 22-இல் தொழில் நுட்ப, பொருளியல் ஆய்வு அமைப்பு நடத்திய கருத்தரங்கில். (*தினமணி: 23-4-89'*)

## தமிழ்நாட்டில் வறுமை நிலை கூடுகிறது!

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடிக் கொண்டிருப்பவர்களது எண்ணிக்கை அனைத்திந்திய அடிப்படையில் 37 விழுக்காட்டிலிருந்து. 1989-90-இல் 26 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது ஆனால் தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் தொகை 48 விழுக்காடாக உள்ளது. தமிழ்நாட்டில் சிற்றூர்ப் பகுதிகளில் வறுமை அதிகமாகி இருக்கிறது.

சிற்றூர்ப் பகுதி மக்களின் பொருளியல் நிலையை உயர்த்துவதற்காக ஒதுக்கப்படும் பணத்தில் பாதி முறைகேடாகப் பயன்படுத்தப் படுகிறது; வேறு செலவுகளுக்கும் திருப்பி விடப்படுகிறது.

7-ஆவது திட்டத்தில் வறுமை ஒழிப்பிற்காக உரு 9500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வளவு பெருந்தொகை முறையாகச் செலவிடப் பட்டதா என்பதைக் கண்காணிக்க முறையான அமைப்பு எதுவும் இல்லை.

இந்திய உணவுக் குழுமத்தை (Corporation) போல் இந்தியா முழுவதிலும், உழவர்கள் விளைவு செய்யும் பொருள்களைச் சந்தைப் படுத்துவதற்கு (விற்பனை செய்வதற்கு) முறையான ஓர் அமைப்பு தேவை.

— மேற்படி கருத்தரங்கில், தொழில் நுட்ப பொருளியல் ஆய்வு அமைப்பின் தலைமைக் கருத்தாளர் - **வி. கார்த்திகேயன்.**

**அன்பர்கள் கவனிக்க!**

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

# பறம்பை அறிவன் பக்கம்!

## 1. நாளும் மலரும்...

சோவியத்து நாட்டு வெளியீடுகள் தமிழகத்தில் ஏராளமாக விற்பனை ஆகின்றன. உலகம் கைப்பட உதவும் பலகணிகள் மீது நாம் அக்கறை கொண்டிருக்கிறோம்!

'சோவியத்து ஒன்றியம்' என்ற பெயரில் 'தமிழில்' ஒரு வெளியீடு என்றால் மகிழலாம். தமிழர்கள், 'ஆங்கில ஆர்வலர், வெறியர்' என்ற பழிக்கு ஆளாகியுள்ளார்கள்.

ஆனால், உலகியல் கண்ணோட்டம் கொண்டவர்கள் நடத்தும் ஏட்டில் 'சோவியத்து ஒன்றியம்' என்றில்லாமல் 'சோவியத்து யூனியன்' என்றிருப்பது ஏன்?

பழகி விட்டதென்பதால் பழைய பின்தங்கிய வாழ்க்கை முறையை அறிவுக்கிடமின்றி ஏற்றுக் கொள்வதெப்படி?

'தாய்நாடு' என்ற தனிச்சுற்றிதழ் வெளியிடும் தோழர். இராசன், 'பாரததேசம் பழம் பெரும் தேசம், நாம் அதன் புதல்வர்கள்' என்று பாரதியின் இசைத் தட்டைத் திருப்பிப் போடுகிறார்.

இவரிடம் "யார் கொள்ளையர்கள்?" என்ற 'தமிழ் இன விடுதலைக் கழக' வெளியீட்டைப் படிக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

தமிழக 'நெய் வித்துகளை' ஆட்டிட ஆலைகள், தமிழ் நாட்டில் போதுமான அளவில்லை! பிண்ணாக்குக்கும் நாம் வடக்கே கையேந்துவதா? என்று வினாவெழுப்புகின்றனர்!

இராசன் போன்றவர்கள் இதற்கென்ன சொல்லப் போகின்றார்கள்?

தமிழ், தமிழினப் பற்று என்பது பிற இனப் பகை யாகாது. அதே வேளை 'அடிமை' யாவது மில்லை என்பதே நம் நிலைபாடு.

மதுரைப் பெரியவர் மானமிகு மா. ச. இராமசாமி தம் தலையெழுத்தை முன்பு எம். எஸ். என்று எழுதி வந்தார். தமிழ், பயிற்றுமொழி ஆகும் இயக்கம் தொடங்கியபோது, அதன் அமைப்பாளரான அவரிடம் இத்தவறு சுட்டிக் காட்டப் பெற்றது. உடனே, அப்பெரியவர் இளமை முறுக்கோடு தன்னுணர்வு பெற்றுத் திருத்தம் செய்து கொண்டு மா. ச. இராமசாமி என்று எழுதி வருகிறார். பழகி விட்டதென்ற அச்செல்லப் பெயரை—"எம். எஸ். ஆர்" தூக்கி எறிந்து விட்டுப் புத்திளமை பெற்றார். மா. ச. இரா! வாழ்க.

'எடுத்துக் காட்டு' என விளங்கிடவும் சொன்னபடி நடக்கவும் செய்யும் துணிவு கொண்டிருப்பதாலும் அவர் பெரியார் வழிப் பெரியாராக விளங்குகிறார் என்பேன்.

## 2. மக்களை இணைக்க வேண்டும்!

தமிழ் நாட்டில் 'தமிழர் தேசிய இயக்கம்'— பழ. நெடுமாறன் தலைமையில் இயங்குகிறது. இதன் சார்பில் தஞ்சையில் நடந்த கூட்ட அறிவிப்பைத் திரு. பரந்தாமன் தந்தார்.

18-4-89 இல் தஞ்சைத் "திலீபன் திடலில்" நடந்த அக்கூட்ட அழைப்பின் பின்புறம் தமிழின உரிமை மீட்பு இயக்கம் வெளியிட்ட அறிவிக்கை உள்ளது. அவ்வியக்கம்,

உழவர் போராட்டக் குழு அமைப்பது—
காவிரிச் சிக்கலை நீக்குவது—
உழவர் அவலத்தைப் போக்குவது—

என்ற நோக்கம் உடையது.

தமிழக மக்களை இணைக்கின்ற, ஒன்று படுத்துகின்ற முயற்சியில் போராட்டங்கள் உயர்ந்து செல்லுதல் வேண்டும்.

## 3. அமைப்பாகச் செயல்படுதல் :

திரு. க. ப. சண்முகநாதன், திரு. சொ. அன்பழகன், பரணி ஆகியோரிடம் பேசிக் கொண்டிருந்தேன். இவர்கள் மக்கள் உரிமை, உழவர் போராட்டம், போன்ற இயக்க நடவடிக்கைகளை ஆதரித்துப் பேசினார்கள்.

ஆயினும், அமைப்பாகச் செயல்படாமல் உள்ளவர்கள். இன்றைய அமைப்புகள் அனைத்தும் தழுவியன அல்ல. எனவே, கருத்துரிமை ஒன்றினைச் சார்ந்து பேசுவதன்றி இவர்களால் யாது செய்ய முடியும்?

ஒன்று தோன்றுகிறது. கருத்துத் தெளிவுக்கான, தேடலுக்கான காலம் என ஒன்றில்லை. அஃதொரு தொடர் முயற்சி, 'சாந்துணையும் கற்றல்' என்ற நெறியை நாம் பின்பற்றுவோம். அப்படிப் பட்ட இயக்கமாக உ.த.மு.க. உள்ளதை உணர்கின்றேன். ஆனால் இவ்வியக்கத் தேவையை உள்ளும் புறமுமாக உள்ளவர்கள் போதிய அளவு புரிந்து செயல்படவில்லை என்றே கூறலாம்!

## 4. தலைவர்களும் தவறுகளும் விழிப்புணர்வும்!

அரசியல் தலைவர்கள் கூடிப் பேசுகிறார்கள். கட்சி கட்டுகின்றார்கள். தங்களுக்குள் எடுக்கும் முடிவுகளைக் கமுக்கமாக வைத்துக் கொள்கின்றார்கள்.—போராட்டம், ஊர்வலம், எல்லாம் நடத்துகின்றார்கள். கட்டுப்பாடாகப் பேசுகின்றார்கள். இவர்கள் 'பேசுவது' உண்மை என்று நம்ப வேண்டும். நம்புகின்றவர்களே கட்சிக்காரர்கள்,

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

# தமிழ்நில விடுதலைப் போராளி தோழர் மாறனின் நினைவு நாள் கூட்டங்கள்!

## 1. காஞ்சிபுரத்தில் நிகழ்ச்சி!

தமிழ்நில விடுதலைப் போராளி, தோழர் **மாறன்** என்னும் தமிழரசனின் முதலாண்டு நினைவு நாள் கூட்டம் கடந்த 13-4-89 அன்று காஞ்சிபுரத்தில் முத்தியாலு சத்திரத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தோழர் **மா. செ. தமிழ்மணி** அவர்களும், தோழியர். **இறை. பொற்கொடி** அவர்களும் கலந்து கொண்டார்கள். இந் நிகழ்ச்சியில் தமிழ்நாடு இளைஞர் பேரவை எம். சி. ஐ. பி அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் முப்பது பேர் அளவில் கூடி இருந்தனர். தொடக்கத்தில் தோழர் **நிலவன்** அவர்கள் ஈகிகளின் நினைவுப் பாடல்களைப் பாடி வரவேற்புரை நிகழ்த்தினர். தோழர் **மாணிக்கம்** அவர்கள் நிகழ்ச்சியினைத் தலைமை ஏற்று நடத்தினர். உலகத் தமிழின முன்னேற்றக் கழக வடவார்க்காடு மாவட்ட அமைப்பாளர் தோழர் **மா.செ. தமிழ்மணி** அவர்கள் தோழர் மாறனின் படத் திறப்பை நிகழ்த்தினர்.

பின்னர் தோழர்கள் நிலவன், முத்து, அன்பு, கண்ணன், செம்பரிதி ஆகியோர் தமிழ்நாடு ஏன் விடுதலை பெற வேண்டும் என்பதற்கான, கரணியங்களையும், தோழர் மாறனின் பொது வாழ்வுப் பணி பற்றியும், தமிழ் நாட்டு அரசியல் வரலாற்றுடனே அவர் எப்படித் தம்மை வளர்த்தெடுத்துக் கொண்டு இறுதியாகத் தமிழ்நில விடுதலைக்குத் தம்மை ஒப்புவித்துக் கொண்டார் என்பது பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர்.

இறுதியாகத் தோழர் மா. செ. தமிழ்மணி அவர்கள் "விடுதலை நோக்கில், பேசி, எழுதி வந்த தமிழகம் இப்போதுதான் செயல்படத் தொடங்கி உள்ளது. அதில் தமிழ்நாடு இளைஞர் பேரவை முனைப்பாகச் செயலாற்றுகின்றது. இன்றைய இளைஞர்களின் இந்த ஆர்வம் உறுதியாகத் தமிழ்நில விடுதலையைப் பெற்றுத்தரும்" என்று நம்பிக்கையோடு கூறினர். இதைத் தொடர்ந்து தமிழ்நில விடுதலைப் போர் உறுதிமொழி கூறி தோழர் தமிழ் நாடன் அவர்கள் நன்றியுரை கூற, கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கூட்டம் கலைந்தும், கலையாமலும் இருந்த அந்த இரவு 9-30 மணி அளவில் சென்னையிலிருந்து தோழியர். இறை. பொற்கொடியும், தோழியர். முல்லையும் வந்தனர். நிகழ்வில் தாம் தொடக்கத்திலிருந்தே பங்கேற்க இயலாநிலை இருப்பினும் தாம் தோழர்களை எப்படியும் சந்திப்பதில் மகிழ்வதாகக் குறிப்பிட்டார். குடும்பச் சுமைகளினூடே தமிழக விடுதலையில் பணியாற்றும் ஆர்வம் அவரின் வருகையாலும் குறுகிய காலப் பேச்சாலும் வெளிப்பட்டது.

## 2. சென்னை, புதுவண்ணையில் நிகழ்ச்சி:-

தமிழ்நில விடுதலைப் போராளி தோழர் **மாறன்** என்னும் **தமிழரசனின்** முதலாண்டு நினைவு நாள் கூட்டம் கடந்த 11-4-89 அன்று சென்னையில், புதுவண்ணைப் பகுதியில் உள்ள எம். டி. எல், பி. குடியிருப்பில் A. 400 எண் உள்ள இல்லத்தின் முன்னமைக்கப் பெற்ற திடலில் நடைபெற்றது. மாறனின் தந்தையார் திரு. **இராம கிருட்டிணன்** அவர்களும் தாயார் **பாளையம்மாள்** அவர்களும் மற்றும் அவர் உறவினர்களும் அதில் கலந்து கொண்டனர்.

அன்று நடைபெற்ற கூட்டத்திற்கு, திரு. திருக்குறள் மணி புலவர். இறைக்குருவனர் அவர்கள் தலைமை தாங்கினர். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தலைவர். பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள், தொடக்கத்தில், தோழர் மாறனின் உருவப் படத்தைத் திறந்து வைத்து, அதற்கு மலர் மாலை அணிவித்து விட்டு, இறுதியில் நீண்ட இரங்கல் சிறப்புரை ஆற்றினர்கள். இந் நிகழ்ச்சியில் தொடக்கத்தில் தலைவர் உரையைத் தொடர்ந்து, திருவாட்டி. **தாமரை பெருஞ்சித்திரனர்** அவர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்-

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

---

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர்கள் என்று கூறுமலே வகுக்கப்பட்ட சட்டமாகும்!

ம. கோ. இரா. பேரில் பரிசுத் திட்டம், என்று 'கலைஞர்' அறிவிப்பதை அவர்களுடைய கட்சிக்காரர்கள் கசப்பு மருந்தாக எண்ணி விழுங்கி விடுகிறார்கள்!

ம. கோ, இரா. இறந்த பிறகு புனிதர் ஆகி விடுகிறார். அவர் 'தலைமை'யில் நடந்த ஊழல்களை' அவருக்குத் தொடர்பில்லாதவை என்பது போலப் பேசுகின்றார்கள். எதிர்காலத்தில் எப்படி 'வரலாறு' புதைக்கப்பட வேண்டும் 'எழுதப் பெற' வேண்டும் என்பதில் தலைமைகள் விழிப்பாக உள்ளன. ஆனல், வரலாறு அதன் போக்கிலேயே செல்லும்; செல்கிறது.

இத்தகு தலைமைகளால் எதிர்காலத் தலைமுறை, தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடியாமல் தவிப்பதும், தடுமாறுவதும் நிகழும். ஆயினும், வருங்காலம் சிக்கல்களை அறுத்துக் கொள்வதில் தீரமுடனும் வீரமுடனும் விளங்குவது திண்ணம்.

Scanned with CamScanner

# கருவிப் போரா? கருத்துப் போரா?

மதிப்பிற்குரிய ஆசிரியரவர்கட்கு,

வணக்கங்கள் பல. தங்களின் 15-04-89 நாள் இட்ட தமிழ்நிலம் ஏட்டினைப் படிக்கும் பேறு பெற்றேன். 'உலகத் தமிழினத்தை ஒன்றுபடுத்தித் தமிழனுக்கெனத் தனியரசு ஒன்றை உலகின் எந்த மூலையிலாவது நிறுவியே ஆக வேண்டும்; துயரமும், கண்ணீரும் ததும்பி நிற்கும் எம் அன்னை முகத்தில் இளமுறுவல் பூப்பதைப் பார்த்த பின்னரே எம வாழ்நாள் முடிய வேண்டும்' எனத் திண்ணிய எண்ணங்கொண்டு திரியும் எம்போன்றோரின் வயிற்றில் பாலையும் தேனையும் ஒருங்கே வார்த்ததெனத் தங்கள் இதழ் அமைகிறது.

'கற்பி; ஒன்றுசேர்; புரட்சிசெய்' என அண்ணல் அம்பேத்கார் கூறுவார். கற்பிக்கப் படாமல் ஒன்று சேர்ந்த கூட்டம் நிலைத்து நிற்காது ஒன்று சேர்ந்த சராசரி மக்களின் ஈடுபாடு இல்லாமல் புரட்சி செய்ய முடியாது; புரட்சி இல்லாமல் விடுதலை வராது; அப்படியே வந்தாலும் அது அடிமைத்தனத்தின் இன்னோர் உருவமாக இருக்குமேயொழிய உண்மையானவிடுதலையாகாது!

தமிழனின் பெருமையை—தமிழினத்தின் பெருமையை—உலகுக்கு உணர்த்த அன்று, தமிழனுக்கே உணர்த்த நாம் எத்தகைய முயற்சிகளை எடுத்துக் கொண்டுள்ளோம்? நமையெல்லாம் ஈன்றெடுத்த கன்னித்தமிழ்த் தாயின் அருமை பெருமைகளை நீங்களும், நானும் அறிந்துதான் இருக்கிறோம்! ஆனால் நம் அருமை உடன்பிறப்புகளே, எம் தமிழ்த்தாயின் இனிய புதல்வர்களே, பெற்றவளின் பேற்றினைப் புரிந்து கொள்ளாமல் ஆடி ஓடித் திரிகிறார்களே; அவர்களை அன்பினாலும், அறிவுறுத்தலினாலும் திருத்த நாம் மேற்கொண்ட பணிகள் என்ன?

திராவிட வழிமுறைத் திருநாட்டினை வந்தேறி ஆரிய இனத்தினர் ஆண்டு கொண்டிருக்கின்றனர். சிந்து முதல் சிங்களம் வரை இருந்த எம் எல்லை இன்று திராவிடத் துணைக் கண்டத்தின் தென் கிழக்கு மூலையிலே சுருங்கிக் கிடக்கின்றது. இந்த எம் நிலத்துக்கும் இறையாண்மையோ, தன்னாட்சியோ கிடையாது. இந்நிலை மாறிட அரத்தம் சிந்தி இன்னுயிர் ஈந்தனர் சிலர். அந்தோ, அவர்களுக்கும் அவப்பெயர்தான் சூட்டப்பட்டது!

நமக்குள்ளேயே நாம் சண்டையிட்டுக் கொள்வது என்று முடியப் போகிறது? திராவிட கழகத் தலைவர் வீரமணி, ஈழத்தளபதி பிரபாகரனின் பிறந்த நாளின் போது ஓர் அரிய கருத்தை வெளியிட்டார்.எம் ஆருயிர் உடன்பிறப்புப் பிரபாகரனின் பெயர் நாளும் நிலைத்திருக்க, தமிழர் நெஞ்சில் வீரம் வளர்ந்திருக்க, தாம் பெயர் சூட்டும் அனைத்துக் குழந்தைகளுக்கும் பிரபாகரனின் பெயரையே வைக்கப் போவதாகப் பகுத்தறிந்த உளவைத் தெரிவித்தார். பாண்டியன் நெடுஞ்செழியனின் பெயர் கொண்டோரெல்லாம் அவனைப் போலவா வீரமாயிருக்கிறார்கள்? பிரபாகரனின் பெயர் கொண்டதால் மட்டும் வீரமும் தமிழுணர்வும் நேர்மையும் நெஞ்சுறுதியும் வந்திடுமா என்ன? வீரமணி அவர்கள் தாம் செய்த தவறுகளுக்காகவோ, யாருக்கோ அஞ்சிக் கொண்டோ பேசுவது போல இருந்தது. இதற்காக அவரை நாம் கண்டனம் செய்ய அணியமாயில்லை. ஏனென்றால் ஆரிய மோகினிகளுக்கும், கன்னடத்து விலைமாதருக்கும் வெண்சாமரம் வீசும் திராவிட உடன்பிறந்தவர்களைவிட அவர் பல மடங்கு உயர்ந்துதான் இருக்கிறார்! எல்லாரும் நம்மளவே திண்மையும் திடஉணர்வும் படைத்தவர்களாயிருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது சரிதானா?

எந்த ஒரு விடுதலைப் போரும் கருவிகளோடே பிறந்ததில்லை. ஈழ விடுதலைப் போரின் வரலாறு அரை நூற்றாண்டுகளுக்கானது. கூடிப்பேசியும், கூட்டங்கள் போட்டும் இழிநிலையைக் கற்பித்தனர். விடுதலையொன்றே விடிவுக்கு வழியென பேசித் திரிந்தனர். அரை நூற்றாண்டுக்கான கருத்துப் பரிமாற்றங்களின் உச்ச கட்டமாகக் கருவிப் போராட்டம் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டு விடுதலைக்கு நாம் முதலில் ஏந்த வேண்டியவை துமுக்கிகளையா, எழுதுகோல்களையா? நாம் முதலில் இறங்க வேண்டிய களம் ஆரிய அதிகாரப் படைத்துறைக்கெதிராகவா அல்லது உடன்பிறப்புத் தமிழர்களை கற்பிக்கும் தெருமுனைக் கல்வி மற்றும் கலை நிகழ்ச்சிகளிலா? அஞ்சுதல் அஞ்சாமை பேதைமை அல்லவா? நம்முடைய வலிமையைப் பெருக்காமல் பொருத நினைப்பதும் அவ்வாறே அல்லவா? தாங்கள் தாம் விளக்கமளிக்க வேண்டும். தாள் பணிந்து வணங்குகிறேன்.

—ந. அ. நவநீதன், சென்னை-2.

---

(10 ஆம் பக்கம் தொடர்ச்சி)

தினார்கள். திருவாட்டி. பொற்கொடி இறைக்குருவனார், திருவாளர்கள். குணத்தொகையன் (த.இ பே.) சிவபெருமான (பை.பா)உலகமுதல்வன் (மு..ம) பூங்குன்றனார், அ.மு. நிசாமுதின் (ரா. ச. பே) நடராசன் (மு.போ.சு ) தமிழ்மணி (மாறனின் தம்பி) அனந்தகுமார் (இ. பா. மாணவன்) ஆகியோர் மறைந்த மாறனைப் பற்றி இரங்கலுரை ஆற்றினார்கள். இறுதியாக திரு இளமுருகன் அவர்கள் உறுதிமொழி கூறிக் கூட்டத்திற்கு வந்திருந்தோர்க்கு நன்றியுரை கூறினார்கள். இரவு 10 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது. 0

கூலியைக் கூட்டிக் கொடு—இல்லை
விலையேற்றத்தைக் கட்டிப் போடு!
வேலியே பயிரினை மேய்வதா?
ஆள்பவர் அடிமையாய்த் தாழ்வதா?
மக்களை ஒடுக்கிட ஓங்குங் கை,
நடுவண் வல்லாட்சியை வணங்கிக்
கும்பிட்டுக் கால்தொட்டுக் கிடப்பதா?
அடிமைநிலையை ஓரடிமை ஏற்பதா?
கடவுளை நம்பினுல் கைவிடப் படாராம்;
ஆள்பவர் கூறும் அறிவுரை கேட்டிடு!
இவரால் ஏற்பட்ட ஏமாற்றங் கண்டே
அதிராமல் உணர்ச்சிவேகம் கொள்ளாமல்
அடங்கிக் கிடக்கச் சொன்ன நூற்பாவிது!
தோளினை உயர்த்து! நேர்மைச் செயலினை
நெஞ்சினில் நிறுத்து; விடுதலை ஆர்த்து
வந்திடும் வாயிலில் வரவேற்றுக் கூவு!

## சட்டவரம்பில் நடப்பவன்

மார்க்சையும் இலெனினையும்
மேற்கோள் காட்டிக் காட்டி—
விளக்கம் கூறியே, என்
விடிவு தள்ளிப் போய் விட்டது!

வரலாற்றுத் தடங்களில்
நடந்து நடந்து சலித்துப் போன
நினைவுகளுடன் அலைகிறேனே...!
செயலெல்லாம் ஒடுங்கிடவோ?

புதிய புதிய ஆள்களைப்
பிடித்துப் பழகிப் பார்த்தும்
உரசித் தேர்ந்தும்
ஓரடியும் முன்னேறவில்லையே!

என் கனவுக் கனல் நாக்கு
நீண்ட அளவுகூட
என் செயல்—கைகள் நீளவும்
கால்கள் அசையவுமில்லையே!

ஓ! கால்களைத் தளைத்துள்ள
இருப்புத் தொடரிகளை
உடைக்க என் கைகள்
துருதுருத்துக் கசிகின்றன!

அந்த நெருப்புக் குருதியால்
அவ்விலங்குகள் உருக்கப்படும்!
ஒளி தேடிப் பாயும் என்னை
சட்டமென்ன பண்ணும்?

-பறம்பை அறிவன்.

---

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்
கீழ் உள்ள தமிழ் நாட்டுப் போராளிகள்!

மதுரை நடுவண் சிறையில் மே-88 முதல்
மா. பொழிலன், த. முகிலன், இளங்கோ.

கோவைச் சிறையில்,
பாண்டியன், சுப்பிரமணியன், நாராயணன்.

---

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமனிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 38**

அரசியலுக்குப் பதவி தேவைப் படலாம்; பதவிக்காக அரசியல் தேவைப் படக் கூடாது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 121.

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5 : அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண் : 847829;

உறுப்பினர் :

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

பெறுநர்:
திரு. / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657